**களனி பல்கலைக்கழகம் - 2017**

---

களனி பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மாணிப்பதற்கு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களணி பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் தேறக்கூடிய பெறுமதியில் போதியளவான வேறுபாடொன்று ஏற்படுமிடத்து மீள்மதிப்பீடு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 653,159,142 கிரயமான காணிக்காக மீள்மதிப்பீடு மேற்கொண்டு நியாயமான பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 52,021,032 கிரயமான 23 மோட்டார் வாகனங்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீடு நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 2.51 பேர்ச் காணியை கொள்வனவு செய்வதற்கும், அதன் முத்திரைக் கட்டணமும் முறையே ரூபா 1,894,340 மற்றும் ரூபா 74,773 தொகைகள் செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை மூலதனச் செலவினமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் வாகனங்கள் 20 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் 05 வருட இறுதியில் வாகனமொன்று முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்து முடிவடைய வேண்டிய போதிலும், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கைப்பற்றப்பட்ட ரூபா 16,715,704 கிரயமான 03 வாகனங்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போதும் ரூபா 3,343,141 தொகையான பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 11 வாகனங்கள் மீளாய்வாண்டில் 14 சந்தர்ப்பங்களில் விபத்துக்களுக்கு உட்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2014 நவம்பர் 17 ஆந் திகதி முதல் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலான காலத்தில் இரத்துச் செய்யப்பட்ட ரூபா 1,113,344 பெறுமதியான 254 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 75,000 தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 4,674,889 தொகையான பாதுகாப்பு வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vii) ஆம் பந்தி | நிறைவேற்று பதவியணியின் வெற்றிடங்களை நிரப்பாமல் 04 உத்தியோகத்தர்கள் 03 மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான காலம் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழத்தின் நிதிவிளைவுகள் ரூபா 365,899,881 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 495,212,649 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 129,312,768 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வெளிவாரி பரீட்சை வருமானம் ரூபா 169,094,386 இனால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் பதவியணியினர் கிரயம் ரூபா 137,382,648 இனால் அதிகரித்தமை என்பன இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நிதிவிளைவுகளில் மிகை ஏற்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீள சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,572,617,629 தொகையான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டு வரையில் ரூபா 2,691,011,756 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

**(அ) மாணவர்களை உள்ளீர்த்தல்**

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் 05 வருடங்களுக்கு சேர்க்க முடியுமான மாணவர்களின் எண்ணிக்கை 3,205 ஆக இருந்ததுடன் 3,235 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மருத்துவ பீடம், கணனி மற்றும் தொழில்நுட்ப பீடம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் மற்றும் கலைப்பீடங்களுக்காக முறையே 12, 12, 45 மற்றும் 116 மாணவர்கள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்ததுடன் உரையாடல் மற்றம் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறி, விஞ்ஞான பீடம் மற்றும் கலைப்பீடத்தால் விசேட நுழைவிற்காக முறையே 36, 46 மற்றும் 73 மாணவர்கள் குறைவாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) விரிவுரைகளை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாணவர் கையொப்பப் பதிவேடுகளில் திகதி, விடய அலகு, விரிவுரையாளரின் பெயர், கையொப்பம் மற்றும் விரிவுரை நடாத்தப்பட்ட நேரம், கற்கை ஆண்டு போன்ற விடயங்கள் குறிப்பிடப்படாத அனேகமான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் விரிவுரையாளர்களின் கற்கை கால அட்டவணையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட படி விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை மேவுகை செய்யப்பட்டிருந்தாதென உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக கற்கைப்பீட அலுவலகத்தினால் பேணப்படுகின்ற வருகைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கும், மாணவர்கள் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட திகதிளுக்கும், மாணவர்கள் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கும் இடையே இணங்காமைகள் காணப்பட்ட 23 சந்தர்ப்பங்கள் கலைக் கற்கைப் பிரிவில் மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) தொலைக்கல்வி மற்றும் தொடர்ச்சியான கற்கை நிலையம்**

தொலைக்கல்வி மற்றும் தொடர்ச்சியான கற்கை நிலையத்தால் கடந்த 04 கற்கை ஆண்டுகளுக்காக 67,828 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின் போது விஞ்ஞான பட்டப்படிப்பிற்காக பதிவு செய்திருந்த 91 மாணவர்கள் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் 07 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும், ஒருவராவது பட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ii) 2014 மற்றும் 2015 கற்கை ஆண்டுகளின் போது கலைப்பீடம், வியாபார முகாமைத்துவ பீடம் மற்றும் வணிக பீடம் என்பவற்றில் 03 பாடநெறிகளுக்காக பதிவு செய்திருந்த 16,079 மாணவர்களுக்கான ஆரம்ப பரிசோதனை 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 கற்கை ஆண்டிற்காக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கலைப் பீடம் மற்றும் வியாபார முகாமைத்துவ பீடங்களில் 03 பரீட்சைகளின் பெறுபேறுகளை விநியோகிப்பதற்கு 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான காலம் எடுத்திருந்ததுடன் இதுவரை பெறுபேறுகள் விநியோகிக்கப்படாத 11 பாடங்களுக்குரிய விடைகளை பரீட்சிப்பதற்கு பிரிவுத் தலைவர்களுக்கு கையளிக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், மீளக் கையளிக்காதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 28,876 தொலைந்து போன புத்தகங்களின் பெறுமதிகளை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இந்த எண்ணிக்கை வேறுபடுவதாக எனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் விசேட நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட 11 நிதியக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 174,824,530 தொகைகள் அந்த நிதியங்கள் தாபிக்கப்பட்டதற்குரிய பணிகளுக்காக ஈடுபடுத்தாமையின் காரணமாக, மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திற்கும், மருத்துவ பீட அபிவிருத்தி நிதியத்திற்கும் முறையே ரூபா 132,733,087 மற்றும் ரூபா 42,091,443 ஆக மாற்றப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 03 நிதியக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 13,705,037 ஆக இருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் அதில் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 959,380 மாத்திரமாக இருந்தது.

(இ) ஆராய்ச்சிப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்காக வெளிநாடு சென்ற விரிவுரையாளருக்கு அவரின் தங்குமிடக் கட்டணம் மற்றும் ஏனைய செலவினங்கள் அவர் வெளிநாடு செல்வதற்கு முன் அந்நிய செலவாணி மூலம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது வெளிநாடு சென்ற 07 விரிவுரையாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு முன் ரூபா 1,754,713 தொகை இலங்கை நாணயத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சமூக விஞ்ஞான பீடத்தின் இரண்டு விரிவுரையாளர்களுக்கு 2017 நவம்பர் 07 ஆந் திகதி முதல் 10 ஆந் திகதி வரை ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற மாநாட்டில் ஆராய்ச்சிகளை சமர்ப்பிப்பதற்காக பங்குபற்றுவதற்கு பதிவுக் கட்டணம், அமையப் படிகள், உணவு மற்றும் தங்குமிடக் கட்டணங்களாக ஐ.அ.டொலர் 5,442 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தங்குமிட கட்டணத்திற்காக ஹோட்டலிலிருந்து பெறப்பட்ட விலைகளின் பிரகாரம் 07 தினங்களுக்கான கட்டணம் 341 பவுண் ஆக இருந்தும் அதனை ஒரு தினத்திற்கான கட்டணம் எனக் கருதி செலுத்தப்பட்டமையின் காரணமாக ஐ.அ.டொலர் 3,410 தொகை மேலதிகமாகச் செத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) சமூக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருக்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2018 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையும் கற்கை நேர அட்டவணைகளில் விரிவுரை மணித்தியாலங்கள் வேறாக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விரிவுரையாளர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரேயொரு சான்றாக, 2009 ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 20 வினாப்பத்திரங்களைப் பரீட்சிக்கும் நடவடிக்கைகளும் 306 விடயப்பத்திரங்களை பரீட்சித்தலும் மாத்திரமாக இருந்தது. எனினும், இந்தக் காலப்பகுதியில் அவருக்கு சம்பளம் மற்றும் சகல படிகளும் செலுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்ச்சியான சேவைக் காலமொன்று இல்லாதிருந்த போதும் மேலும் விரிவுரை மணித்தியாலங்களை மேவுகை செய்வதாகக் கருதி 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதிய 12/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வுபெறும் வயதில் அவருக்கு மேலும் 2 ½ மாத காலத்திற்காக சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி இந்த விரிவுரையாளருக்கு வரிச்சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் 10 ஆம் அத்தியாயத்தின் 33 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்றுச்செல்லும் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 2018 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 21 பேராக இருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 75,077,754 ஆகக் காணப்பட்டது.

அவ்வாறே பிணை முறிகளை மீறிய விரிவுரையாளர்களுக்கு தவணைப் பணமாக பிணைமுறிப் பணத்தை செலுத்துவதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதி மிகவும் கணிசமான அளவைக் கொண்டிருந்த போதும், தவணைப் பணம் அறவிடப்படுகின்ற காலம் கவனத்திற் கொள்ளப்படாமல் மாதாந்தம் ரூபா 20,000, ரூபா 30,000 மற்றும் ரூபா 50,000 என்ற சிறிய தவணைப் பணங்களில் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையின் காரணமாக பிணைமுறிப் பணத்தை அறவிடுவதற்கு நீண்ட காலம் எடுத்திருந்தது.

### 4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1989 ஆம் ஆண்டின் போது Student Relief Fund என்ற பெயரில் நிலையான வைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் வட்டியுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்தக் கணக்கின் மீதி ரூபா 1,333,567 ஆக இருந்தது. நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கம், அதில் செலவினங்கள் எந்தக் காரணங்களுக்காக செலவிடப்பட வேண்டியுள்ளது போன்றவை தொடர்பாக குறித்துரைக்கப்படாமையின் காரணமாக பல ஆண்டுகளாக இந்த நிதியம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகம் மூலம் 1980 முதல் 2010 வரையான காலத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த புலமைப் பரிசில் நிதியங்களின் 16 கணக்குகள் மற்றும் பரிசு நிதியங்களின் 21 கணக்குகள் என்பவற்றில் முறையே ரூபா 4,097,398 மற்றும் ரூபா 4,249,691 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் இந்த நிதியக் கணக்குகளுக்காக கிடைத்த வட்டி வருமானம் முறையே ரூபா 4,910,648 மற்றும் ரூபா 3,171,581 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது இந்த வட்டி வருமானத்தில் ரூபா 28,100 மாத்திரம் புலமைப்பரிசில் மற்றும் பரிசு வழங்கலுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால் இந்த நிதியங்களிலிருந்து அதிக அளவில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழக ஆராய்ச்சி மானியக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 29,736,235 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 18,032,876 தொகை 2011 ஆம் ஆண்டு முதல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

---

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பிரிவுகளின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1762 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 1385 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடமான ஊழியர்களின் எண்ணிக்கை 401 ஆகக் காணப்பட்டதுடன் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 24 ஆகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர கல்விசார் பதவியணியினர் 781 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 561 ஆனமையால் 220 வெற்றிடங்கள் காணப்பட்டது. 2018 யூலை 30 வரையிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 37 ஐ மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 91 பேர்களை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும், மேலும், 92 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ii) கல்விசாரா பதவியணியினரில் 152 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 24 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டு வெளிவாரி பதவிகளுக்காக மூன்று பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் சுகாதார சேவை தொழிலாளரின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 10 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 25 ஆனமையால் மிகைகளின் எண்ணிக்கை 15 ஆகக் காணப்பட்டது. 2018 யூலை 30 வரையில் கல்விசாரா பதவியணியினரின் 34 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இன்னும் 14 பேர் செப்தெம்பர் மாதமளவில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும் மேலும் 101 வெற்றிடங்கள் காணப்பட்டன.

### 4.6 வாகனங்களின் பயன்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) றாகம மருத்துவ பீடத்திற்கு வழங்கப்பட்ட பேரூந்து வண்டி 2016 மே 26 ஆந் திகதியின் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், இந்த வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்த்தலைச் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பது தொடர்பாகவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குரிய பேரூந்து வண்டியொன்றுக்கு முன்பக்கமும் பின்பக்கமும் கண்ணாடிகளைப் பொருத்துவதற்காக கூறுவிலை கோராமல் 2017 யூலை 09 ஆந் திகதி தினியார் கராஜொன்றிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதனைப் பழுதுபார்த்து பூர்த்தி செய்து மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. நீண்டகாலமாக அந்த பேரூந்து வண்டி கராஜிற்கு வெளியே தரித்து வைக்கப்பட்டிருந்தமையின் காரணமாக துருப்பிடித்துக் கொண்டிருக்கின்றமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

----------------------------------------------

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

-------------------------------------------------------------------------------------------

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டிற்குரிய களனி பல்கலைக்கழகத்தில் தனது வியடப்பரப்பின் கீழுள்ள பணிகள் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், பல்கலைக்கழகத்தினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கழிவுப்பொருள் முகாமைத்துவம், நீர் முகாமைத்துவம், வலு சக்தி முகாமைத்துவம், தங்குமிட முகாமைத்துவம் மற்றும் பயிற்சி பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 05 செயற்திட்டங்கள் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் கணிசமான செயல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்ததாக உபவேந்தரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

### 6.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

-----------------------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மே 09 ஆந் திகதி அதாவது 69 நாட்கள் தாமதத்தின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

-----------------------------------------------------------------------

#### 6.2.1 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் இரண்டு அலுவலகங்களுக்கு திரைச் சேலைகள் வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,610,000 தொகை செலுத்தப்பட்ட போதும், அதற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த பெறுகை செயற்பாடுகளுக்கான கிரய மதிப்பீடு தயாரித்தல், உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல், பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக தொடர்புபடுத்துதல் போன்ற பெறுகை நடைமுறைகளை ஆரம்பிக்கும் போது செய்ய வேண்டிய பணிகளாக இருந்த போதிலும், இந்த

நடைமுறைகளுக்குப் புறம்பாக வழங்குனர் தெரிவு செய்யப்பட்டன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும், பெறுகைகள் குழுவினதும் சிபாரிசு மற்றும் நிர்வாக சபையின் அங்கீகாரம் என்பன பெறப்பட்டிருந்தன.

(இ) மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்காக பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துள்ள வழங்குனரிடமிருந்து கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட வழங்குனர் பல்கலைக்கழகத்தில் மேற்கூறப்பட்ட முக்கிய பணிகள் தொடர்பாக பதிவு செய்துள்ள வழங்குனராக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

ஒப்பந்தப் பெறுமதி ரூபா 157,593,998 தொகையான தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிலையத்திற்கான நிர்மாண ஒப்பந்தத்தின் வேலைகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் நிர்மாணங்கள் 2016 செப்தெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 30 இல் அது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதன் நிதிசார் செயல்முன்னேற்றம் 48 சதவீதம் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்களை மீள மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை புத்தகங்களிலிருந்து அகற்றி நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |
| (ஆ) ஆராய்ச்சி நடவடிக்கைகள் | ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை. |
| (இ) தொலைக்கல்வி மற்றும் தொடர்ச்சியான கற்கை நிலையம் | பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் விநியோகித்தல் தாமதமடைந்தமை. |
| (ஈ) விரிவுரைகளை நடாத்துதல் | மாணவர்களின் கையொப்பப் பதிவேடு குறித்துரைக்கப்பட்ட பிரகாரம் பேணப்படாமை. |
| (உ) பதவியணியினரைச் சேர்த்தல் | பதவியணியினர் வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |